1982 ஏப்ரல் 3]

கிறார்கள் ஆகவே, அந்த அளவுக்கு மாநில அரசு இதற்கான முயற்சிகளைச் செய்து கொண்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதை ஒப்புக்கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்த டீசல், பெட்ரோல் விலையைக் குறைப்பது பற்றி மத்திய அரசிடம் எவ்வளவோ வற்புறுத்தியும் அவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இந்தியாவில் பெட்ரோலிய கச்சாப் பொருள்கள் 60% தான் இறக்குமதி செய்யப்படுகின்றது. மீதி 40% பெட்ரோலிய கச்சாப் பொருள்கள் உள்நாட்டிலேயே கிடைக்கிறது. எனவே உள் நாட்டிலே கிடைக்கக்கூடிய அந்த 40 சதவீதம் பெட்ரோலிய கச்சாப் பொருள்களை இம்மாதிரியான அரசு போக்குவரத்துக்கு வேண்டிய டீசல், பெட்ரோல் போன்ற பொருள்களை சகாய விலையில் கொடுக்க வேண்டும் என்று மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லியபடி இதிலே நீங்கள் குறைந்த விலையிலே கொடுக்கவேண்டுமென்றும் அல்லது வரியைக் குறைத்துக்கொடுக்க வேண்டுமென்றும் நாம் எழுதியிருக்கிறோம். மத்திய அரசாங்கத் திற்கு, கொடுக்கவேண்டுமென்ற எண்ணம் இருந்திருந்தால் 40 சதவீதம் அளவிலே கொடுத்திருக்க முடியும். மீண்டும் எழுதுவதிலே நமக்கு ஒன்றும் சங்கடம் கிடையாது, அதே பதில் தான் மீண்டும் வரும். இதைக் குறிப்பிட்டுக் கோடிட்டுக் காட்டி எழுதத் தயாராக இருக்கிறோம்.

சென்னையில் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள
சலுகைக் கட்டண பயணச் சீட்டுகள்.

*வினா எண் 749— திரு. ரமணி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் மாணவர்களுக்குச் சலுகை கட்டண பஸ் பாஸ் வழங்கப்பட்டுள்ளதைத் தவறாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்ற புகார் அரசுக்கு கிடைத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்த விவரங்கள் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) ஆம்

(ஆ) மாணவர்களுக்கான சலுகைக்கட்டண பயணச் சீட்டுகள் பின்வரும் முறைகளில் தவறாகப் பயன்படுத்தப்படு கின்றன

(1) மாணவர் அல்லாத ஏனையோர் சிலர் மோசடியாகவோ பொய்யாகவோ மாணவர்கள் என்கிற அத்தாட்சி (பற்ற) மாணவர் சலுகைக் கட்டண பயணச் சீட்டைப் பயன்படுத்தி வருகின்றனர்,

[1982 ஏப்ரல் 3

(2) மாணவர்களில் ஒரு பிரிவினர், ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் சலுகை வசதியைப் பெற பதிவு செய்து கொண்டு அவர்கள் சலுகை பெறுவதற்குத் தகுதியுடைய தொகைக்கு மேல் இச்சலுகையினைப் பயன்படுத்தி வருகின்றனர்.

(3) மாணவர்களில் ஒரு பிரிவினர், அவர்களது பயணச் சீட்டுகளுக்கு (டோக்கன்) பதிலாக பிறரது பயணச் சீட்டுகளைப் பயன்படுத்தி வருகின்றனர்,

திரு கு. ரமணி: தலைவர் அவர்களே, ஒரு நல்ல நோக்கத்தோடு அரசு மாணவர்களுக்குக் கொடுத்துள்ள இந்தச் சலுகை தவறாகப் பயன்படுத்தப்படுகின்ற காரணத்தினால் அந்தச் சலுகையை அனுபவிக்க முடியாமல் போகக் கூடாது என்பதைக் கருத்தில் கொண்டு அப்படித் தவறு செய்வதற்கு இடம் இல்லாத படிக்கு ஒரு சரியான திட்டத்தின் அடிப்படையில் திருட்டுத் தனமாக செய்யமுடியாத ஒரு பாதுகாப்போடு தொடர்ந்து இந்த பாஸ் வழங்கப்படுவதற்காக நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசு என்ன செய்து கொண்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இப்படிப் பட்ட மோசடி நடக்கிறது என்பதை உணர்ந்து அரசாங்கம் இதிலே கொஞ்சம் கடுமையான நடவடிக்கை எடுத்து யார், யார் தவறு செய்ததாகக் கண்டுபிடிக்கப்படுகிறார்களோ அவர்களுக்குத் தொடர்ந்து இந்தச் சலுகை பயணச் சீட்டுக் கொடுக்கப் படாமல் செய்யப்படுகிறது. அதிலே மாணவர்கள் அல்லாதவர்கள் புகுந்து ஈடுபட்டிருப்பார்களானால் அவர்களைக் கண்டு பிடித்து அவர்கள் மீது காவல் துறை தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. ஏறத்தாழ 325 மாணவர்கள்—நான் முதலிலே சொன்னபடி—மற்றவர்களுடைய சலுகைகளை பயன்படுத்துகின்ற நிலையிலே ஈடுபட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. நாம் கடுமையான நடவடிக்கை எடுக்கின்ற முறையிலேதான் ஆங்காங்கே உள்ள கல்வி நிறுவனங்களை அழைத்து எந்த எந்த மாணவர்கள் எங்கெங்கே படிக்கிறார்கள் என்ற அத்தாட்சி வேண்டுமென்று கேட்டு அந்த அத்தாட்சி வழங்குகிறவர்கள் யாரோ அவர்களுடைய கையெழுத்துக்களையெல்லாம் முதலிலேயே அனுப்பி வைக்க வேண்டுமென்றும் சொல்லி கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

திரு, கு. ரமணி: சரியான நடவடிக்கையை திட்டமிட்டு இந்தச் சலுகையை அனுபவிப்பதை நிறுத்தாமல் அரசு எடுக்கின்ற நடவடிக்கை சரியானது, வரவேற்கத்தக்கது. ஆனால் இந்தத் தவறு நடக்கிறது என்று சொன்னதாலோ என்னவோ தெரிய

வில்லை, கோயம்புத்தூர் போன்ற பெரு நகரங்களிலே மாணவர்களுக்கு அந்தச் சலுகைகள் பல வருஷங்களாகக் கேட்டும் வழங்கப் படாமல் இருப்பதற்கு அதுவும் ஒரு காரணமாக இருக்கிறதா? அதையும் பரிசீலனை செய்து வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப் படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: ஒரு சலுகை என்று வருகிற போது அதிலே தவறும் எப்படியோ கூடவே வந்துவிடுகிறது. அந்த வகையிலேதான் நாம் கொஞ்சம் கடுமையான நடவடிக்கை எடுக்கக்கூடிய சூழ்நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறோம். கோயம்புத்தூரிலே இல்லை என்று சொன்னார்கள், 33 சதவீதம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம், மாணவர்கள் அதை வாங்கிக்கொண்டிருக்கிறார்கள், இன்னும் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கை இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் 33 சதவீதம் சலுகையாகக் கொடுக்கிறோம்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவரவர்களே இந்த மாணவர்களுக்கு பாஸ் கொடுக்கிறபோது, மாலை நேரக் கல்லூரிகளிலே படிக்கின்ற மாணவர்களுக்கும் கொடுக்கிறார்கள். 1,000 ரூபாய், 1,500 ரூபாய் வரையில் சம்பளம் வாங்குகிறவர்களுக்கும் அந்தச் சலுகை கொடுக்கப்படுகிறது. ஆகவே உயர்ந்த வருமானம் உள்ள அந்த மாணவர்களுக்குக் கொடுக்கப்படுகிற சலுகையை அரசு ரத்து செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அதிலே சில தவறுகள் ஏற்படுகின்றன என்பது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு இருக்கிறது. அதைத் தீவிரமாக ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். ஆராய்ந்ததற்குப் பிறகு அதுபற்றி முடிவு எடுக்கப்படும்.

திரு. அ. செல்வராசன்: தலைவர் அவர்களே, இந்த பாஸ் மாணவர்களுக்கு வழங்கப்படுகிறபோது தவறுகள் நடப்பதைத் தவிர்க்க அவர்களுடைய போட்டோ படங்களை ஒட்டி அந்தக் குறைகளைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: அந்த முறையைத்தான் நாம் இப்போது புகுத்தியிருக்கிறோம்.

திரு. சோ. அழகர்சாமி; மாணவர்களுக்குச் சலுகை கட்டணம் என்பது சரியான ஏற்பாடு ஆகும். அதைப்போலவே தொழிற்சாலைகளிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் வீடுகள் பக்கத்திலே இல்லாமல் வெகு தொலைவிலிருந்து வருகிறார்கள், அவர்களுக்கு.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாணவர்கள் பிரச்சினை இது. மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: ஏறத்தாழ நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் பேருந்துகள் சலுகைக் கட்டணத்திலே ஓடிக் கொண்டிருக்கின்றன. மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே அவர்களுக்குத் தனியாக சலுகை அளிக்க வேண்டிய தேவையில்லை என்று கருதுகிறேன்.

லாரிகளுக்கு வாடகை நிர்ணயிக்கும் திட்டம்.

*வினா எண் 750—திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமனியன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள லாரிகளுக்கு வாடகையை நிர்ணயம் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உண்டா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: இல்லை. எனினும் தற்போது நடைமுறையில் உள்ள லாரி வாடகையைப் பற்றி ஆராய ஒரு குழு அமைக்கவேண்டும் என மதுரை மாவட்டம் தேனியிலுள்ள வாணிபக் கழகம் கோரிக்கை விடுத்துள்ளது. இக்கோரிக்கை பரிசீலனையில் உள்ளது.

(முற்பகல் 10.10)

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, லாரி உரிமையாளர்களிடமிருந்து கோரிக்கை வந்திருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். உண்மையில் நடைமுறையில் லாரி உரிமையாளர்கள் முறையான கட்டணங்களை வாங்குவதில்லை. அவர்களுடைய நோக்கத்திற்கு வாங்குவதாகத் தான் இருந்து வருகிறது. ஆகவே குறிப்பிட்ட கட்டணத்தை மாநிலம் முழுமைக்கும் நிர்ணயம் செய்ய அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, லாரி உரிமையாளாகளிடமிருந்து கோரிக்கை வரவில்லை. வாணிப கழகத்திலே இருந்து கோரிக்கை வந்ததாகத்தான் சொன்னேன். எந்த பகுதியிலே தவறு நடக்கிறது எனபதை ஆராயாமல் இதற்கு தனியாக வாடகை எவ்வளவு என்றுநிர்ணயிக்க முடியுமா என்பதை யோசிப்போம். நடைமுறையிலே பார்க்கிறபோது அது சாத்தியப் படாது என்ற கருத்து இருக்கிறது. ஆகவே பரிசீலித்து முடியுமானால் அதைச் செய்வதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது.

திரு. வே. இரா. ஜெயராமன்: தலைவர் அவர்களே, ஊருக்கு ஊர் லாரி கட்டணங்களில் மாறுபாடுகள் இருக்கிறதால், லாரி சொந்தக்காரர்களைக் கொண்டு, அங்கே இருக்கிற கமிஷன் கடைக்காரர்களைக் கொண்டு, விவசாயிகளைக் கொண்டு ஒரு கமிட்டியை ஏற்படுத்தி வாடகையை நிர்ணயிப்பதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன.